**முதல் கூடுதல் சார்பு நீதிமன்றம், ஈரோடு, ஈரோடு மாவட்டம்.**

2026ம் ஆண்டு ஜனவரி மாதம் 28-ம் தேதி பிரதிவாதி தரப்பு சாட்சி பி.வா.சா.1-ன் வாக்குமூலம் 1989ம்ஆண்டு 19வது விதி ஏற்பாட்டின்படிதிரு.G.அசோக்பிரசாத் B.A.B.L., M.S.E.N., ஆணையிட்டு பிரமாணம் செய்யப்படுகிறது.

(வாதி ஆஜர் . பிரதிவாதி ஆஜர். வாதி மற்றும் பிரதிவாதி தரப்பு வழக்கறிஞர்கள் ஆஜர்)

அ.வ.எண்.774/2023

பி.வா.சா.1 பேசிலட்சுமி க/பெ ராமகிருஷ்ண்

<u>வாதி தரப்பில் குறுக்குவிசாரணை தொடர்ச்சி:-</u>

1. இந்த தாவா சொத்து எப்பொழுது கிரையம் பெறப்பட்டது என்றால் ஜீன் மாதம் 2016ம் ஆண்டு ஆகும். எனது தரப்பு மேற்கண்ட கிரைய பத்திரத்தை நீதிமன்றத்தில் ஆவணமாக தாக்கல் செய்துள்ளேனா என்றால் எனது வழக்கறிஞரிடம் கொடுத்துள்ளேன். மேற்படி கிரைய பத்திரத்தை தாவா சொத்து சம்மந்தமாக தாக்கல் செய்யவில்லை என்று சொன்னால் தேவை என்றால் தாக்கல் செய்ய தயாராக உள்ளேன்.

2. வாதி மேற்கண்ட கிரைய பத்திரத்தை தாக்கல் செய்துள்ளார் அதை நான் பார்த்தேனா என்றால் இல்லை. தாவா சொத்து மொத்தம் எத்தனை சதுர அடி என்றால் 834 சதுரஅடிகள் ஆகும். மேற்கண்ட தாவா சொத்தில் 834 சதுரஅடியில் வீடு உள்ளதா அல்லது காலியிடமாக உள்ளதா என்றால் 800 சதுடி அடியில் வீடு அமைந்துள்ளது. மீதம் 34 சதுர அடிகள் சந்துகள் அமைந்துள்ளது.

3. தாவா சொத்தை பர்கானபேகம் என்பவர் எனக்கு கிரையம் செய்து கொடுத்தார் என்றால் சரிதான். நான் கிரையம் பெற்ற கிரைய ஆவணத்தில் கதவு எண்.52 கரிகாலன்வீதி, கருங்கல்பாளையம், ஈரோடு 3 என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான்.

4. மேற்கண்ட கிரைய பத்திரத்தில் எத்தனை நபர்கள் சாட்சி கையெப்பமிட்டார்கள் என்றால் ரவீச்சந்திரன் என்பவர் சாட்சி கையொப்பமிட்டார். மற்றொரு சாட்சியின் பெயர் ஞாபகம் இல்லை. அந்த 2வது சாட்சியான ரவீச்சந்திரன் முகவரி கதவு எண்.52 கரிகாலன்வீதி, கருங்கல்பாளையம், ஈரோடு 3 என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான்.

5. கதவு எண்.52 கரிகாலன்வீதி, கருங்கல்பாளையம், ஈரோடு 3 யாருடைய வீடு என்றால் என்னுடைய தாய், தந்தையர் வீடு ஆகும். மேற்படி வீட்டை கிரையம் வாங்கும் போது நான், என் தாய், தந்தை மற்றும் வாதி இளவர் ஆகியோர் மேற்கண்ட வீட்டில் தான் வசித்து வந்தோம் என்றால் சரிதான். ஈரோடு,வாணியம்பிள்ளையார் வீதியில் அமைந்துள்ள அங்கன்வாடிபள்ளியில் பணியாளராக பணிபுரிந்து வருகிறேன்.
6. மாதம் எனக்கு பிடித்தம் போக சம்பளமாக ரூ.12,250/– வாங்கி வருகிறேன். எனது இறந்துபோன முதல் கணவர் சாமிநாதன் காவேரிபட்டனத்தில் ஒரு காலியிடம் வாங்கி உள்ளார் என்றால் சரிதான். அந்த காலியிடத்தை 2017ம் வருடம் ஒரு ஆண் மற்றும் ஒரு பெண்ணிற்க்கு விற்றுவிட்டேன். மேற்படி காலியிடத்தை விற்க்கும் போது மைனரை சேர்த்துவைத்து விற்றேனா என்றால் குழந்தை மைனர் என்பதால் அவரால் கையெழுத்துயிட இயலாது.
7. நான் எந்த வருடம் முதல் கணவர் உயிருடன் இருக்கும் போது வெளிநாடு சென்றேன் என்றால் டிசம்பர் மாதம் 2012 வருடம் ஆகும். மேற்படி எந்த வருடம் என் முதல் கணவருடன் வெளிநாடு சென்று அங்கு வாதி இளவரை எப்போது பள்ளியில் சேர்த்தோம் என்றால் மே 2014 முதல் அக்டோபர் 2014 வரை ஆகும். அந்த பள்ளியின் பெயர் ஆசியன் இன்டர்நேஷனல் பிரேவேட் ஸ்கூல் அபிதாபியில் உள்ளது. வெளிநாடு செல்வதற்கு பாஸ்போர்ட் வாங்கினேன் என்றால் பாஸ்போர்ட் என்னிடம் உள்ளது. அதை நீதிமன்றத்தில் எனது தரப்பு ஆவணமாக தாக்கல் செய்ய தயாராக உள்ளேன்.
8. அபிதாபியில் எவ்வளவு காலம் தங்கி இருப்பதற்கு விசா காலம் கொடுக்கப்பட்டுள்ளது என்றால் என் முதல் கணவரின் விசாவில் தான் சென்றேன் அது டிப்பண்டன் விசா ஆகும். அந்த விசா காலம் இரண்டு வருடம் ஆகும். விசா ஆவணத்தையும் தாக்கல் செய்ய தயாராக உள்ளேன்.

வாதி தரப்பு வழக்கறிஞர் கேட்டுக்கொண்டதற்கிணங்க குறுக்கு விசாரணை தொடர்ச்சி ஒத்திவைக்கப்படுகிறது.